From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 56 /2016

Deposition of witness for: PW - 1

| | | | |
|---|---|---|---|
| Name | : Arumuganainar | Father/Husband Name | : Arumugam |
| Caste | : | Calling | : AD Mines. |
| Religion | : | Age | : |
| Date | : 30.11.21. | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2021.

முதல் விசாரணை:

நான் தற்போது விழுப்புரம் மண்டல புவியியல் மற்றும் சுரங்கத்துறை மண்டல இயக்குநல் அலுவலகத்தில் மண்டல இணை இயக்குநராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.05.12 முதல் மதுரை மாவட்ட புவியியல் மற்றும் சுரங்கத்துறையில் உதவி இயக்குநராக பணிபுரிந்து வந்தபோது மதுரை மாவட்டம் மேலூர் வட்டம் அய்யாபட்டி கிராமம் புல எண். 593-ல் 0.49.0 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட அரசு புறம்போக்கு நிலத்தல் மேலவளவை சேர்ந்த சின்னன் மகன் தங்கம் என்பவருக்கு மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் செயல்முறை ஆணை 787-2008 கணிமம் நாள் 04.09.08ன்படி 13.10.08 முதல் 12.10.13 வரை 5 ஆண்டுகளுக்கு கல்குவாரி உரிமம் வழங்கப்பட்டிருந்தது. மேற்கண்ட புலத்தில் 01.04.12 முதல் தங்கம் என்பவர் குவாரி பணி ஏதும் மேற்கொள்ளாமல் விட்டுவிட்டார். மேற்கண்ட குவாரியில் தான் அனுமதிபெற்றதுபோன்று கருங்காலக்குடியை சேர்ந்த ராமன் மகன் கிருஷ்ணன் என்பவர் கல் மற்றும் மண் எடுத்துச்செல்ல பயன்படும் லாரி மற்றும் டிராக்டர்களுக்கு வழங்கப்படும் போக்குவரத்து நடைசீட்டில் பயன்படுத்தப்படும் புவியியல் மற்றும் சுரங்கத்துறை ரப்பர் ஸ்டாம்ப், முன்னால் அலுவலர்களின் கையொப்பம்கொண்ட ரப்பர் ஸ்டாம்ப் நாள், மாதம், வருடம் கொண்ட ரப்பர்ஸ்டாம்ப் ஆகியவற்றை போலியாக தயார் செய்து அரசுக்கும் அரசு அலுவலர்களுக்கும் இழப்பு ஏற்படும் வகையில் செயல்படுவதாக இரகசிய தகவலின்படி மேற்கண்ட ரப்பர் ஸ்டாம்புகளை கைப்பற்றி நடவடிக்கை எடுக்குமாறு 07.01.13ம் தேதி காலை 11.00 மணியளவில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான், அதில்

உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

நான் மதுரை மாவட்ட ஆட்சித்தலைவரின் ஆளுகை மற்றும் அதிகார வரம்பிற்குள் பணி செய்கிறேன் என்றால் சரிதான். கருங்காலக்குடி மற்றும் அய்யாபட்டியை சேர்ந்த கிராமங்கள் நிர்வாக அதிகாரிகள் மதுரை மாவட்ட ஆட்சியரின் ஆளுகை மற்றும் அதிகார வரம்பிற்குள் பணி செய்வார்கள் என்றால் சரிதான். கருங்காலக்குடி பிர்க்காவில் சுமார் 20 கல்குவாரிகள் உள்ளது என்றால் சம்பவ சமயத்தில் இருந்தது. கல்குவாரி சம்மந்தமாக ஏதேனும் குற்றங்கள் நடைபெற்றால் தாலுகா அளவில் வட்ட அளவிலான சிறப்பு குழு ( Taluk level Task Force) செயல்பட்டு வருகிறது என்றால் சரிதான். இவர்களையும் கண்காணிக்க மாவட்ட சிறப்பு குழு செயல்பட்டு வருகிறது என்றால் சரிதான். அய்யாபட்டி கிராம நிர்வாக அலுவலரோ, வருவாய் ஆய்வாளரோ, மேலூர் வட்டாட்சியரோ மற்றும் பொதுமக்களோ எழுத்துப்பூர்வமாக இந்த சம்பவம் தொடர்பாக புகார் எதுவும் கொடுத்தார்களா என்றால் இல்லை. சம்பவம் நடைபெற்ற இடம் புவியியல் மற்றும் சுரங்கத்துறைக்கு சார்ந்தது என்பதை உறுதிப்படுத்துவதற்கு கொட்டாம்பட்டி காவல் நிலையத்திலிருந்து ஆவணங்கள் எதையும் பார்வையிட்டார்களா என்றால் இல்லை. ஏற்கனவே பணியிலிருந்த ராஜாராம், வேடியப்பன் ஆகியோர்களை தொடர்புகொண்டு அவர்களை விசாரித்து எழுதுமூலமாக ஏதேனும் பதிலை பெற்றேனா என்றால் இல்லை. சம்பவம் எதுவும் நடைபெறாததால்தான் மேற்படி அதிகாரிகள் யாரும் என்னிடம் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் காவல்துறை சம்மந்தப்பட்ட அலுவலா் கிடையாது என்றால் சரிதான். எனக்கு இரகசிய தகவல் யார் சொன்னார் என்று சொல்லமுடியுமா என்றால் முடியாது. ஆஜர் எதிரியானவர் இன்றைய தேதிவரை அய்யாபட்டி பஞ்சாயத்து உராட்சி மன்ற தலைவர் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வழக்கு சம்பவ தேதியில் எதிரி திராவிட முன்னேற்ற கழகத்தின் ஒன்றிய பிரதிநிதி என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஒவ்வொரு வருடமும் எங்கள் துறையின் சார்பாக குவாரிகள் பொதுஏலம் விடப்படும் என்றால் சரிதான். பொதுவாக ஆளுங்கட்சியை சேர்ந்தவர்கள்தான் குவாரியை ஏலம் எடுப்பார்கள் என்றால் சரியல்ல. பொதுவாக ஆளுங்கட்சியை சேர்ந்தவர்கள் சின்டிகேட் அமைத்து ஏலத்தை அவர்களே எடுத்து அரசுக்கு வருவாய் இழப்பீடு ஏற்படுத்துவார்கள் என்றால் அதுபற்றி தெரியாது. ஒவ்வொரு ஏலத்தின்போதும் எதிரியானவர்

அரசிற்கு அதிக லாபம் கிடைக்கவேண்டும் என்ற எண்ணத்தில் அதிக தொலைக்கு ஏலம் எடுப்பார் என்றால் அதுபற்றி தெரியாது. ஏலத்திற்கு வருவார் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் குவாரிக்கும் கருங்காலக்குடி கிராம நிர்வாக அதிகாரியின் அதிகார வரம்பிற்க்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான். கைப்பற்றப்பட்ட இந்த வழக்கின் ரப்பர் ஸ்டாம்புகள் நடை சீட்டுகள் எங்கள் அலுவலகத்திற்கு சொந்தமானவை என்றால் இல்லை. எங்கள் அலுவலகத்திலிருந்து அவைகள் கடத்தப்படவில்லை என்றாலும், அதற்கு எங்கள் அலுவலக அதிகாரிகள் உடந்தையாக இருக்கவில்லை என்றால் சரிதான். எங்கள் அலுவலகத்தில் முத்திரைகள் மற்றும் அலுவலக பொருட்கள் அனைத்தும் சொத்து பதிவேட்டில் பதியப்பட்டிருக்கும் என்றால் இல்லை. சொத்துப்பதிவேட்டினை கொட்டாம்பட்டி போலீசார் எங்கள் அலுவலகம் வந்து கைப்பற்றினார்களா என்றால் இல்லை. வழக்கு சம்பவம் எதுவும் நடைபெறாததால்தான் சொத்துப்பதிவேட்டினை கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. எங்கள் அலுவலகம் அண்ணா நகர் காவல்நிலைய எல்கைக்கு உட்பட்டது என்றால் சரிதான். அந்த அண்ணா நகர் காவல் நிலையம் மதுரை மாநகர காவல் ஆணையாளர் ஆளுகைக்குட்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட போலி நடைசீட்டு ரப்பர் ஸ்டாம்புகளை நான் பார்த்தேனா என்றால் இல்லை. நான் கேள்விஞானத்தில்தான் இந்த புகாரை கொடுத்தேன் என்றால் சரிதான். புகார் கொடுப்பதற்கு முன்பாகவோ பின்பாகவோ அய்யாபட்டி கிராமத்திற்கு சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டேனா என்றால் இல்லை. என்னைதவிர எங்கள் துறையை சார்ந்த யாரையும் காவல்துறையினர் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். இது பொய் புகார் என்பதால்தான் அவர்களை விசரிக்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவ தேதியில் இருந்த ஒரு ஆளுங்கட்சியின் அமைச்சரின் அழுத்தத்தினாலின், ஏலதாரர்கள் கொடுத்த அழுத்தத்தினால்தான் இந்த புகார் கொடுக்கப்பட்டது என்றால் இல்லை. மேலூர் வட்டாட்சியர், கொட்டாம்பட்டி காவல் ஆய்வாளர் மற்றும் மேலூர் காவல் துணை கண்காணிப்பாளரிடம் நேரடியாக புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் என் புகாரில் அரசுக்கு எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டது என்றும், எதிரிக்கு எவ்வளவு லாபம் என்றும் குறிப்பிட்டுசொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கு சம்பவத்தின்போது தங்கம் என்பவருக்கு கல் எடுக்கும் உரிமம் நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். மேற்படி தங்கத்தை நான் அழைத்து எழுத்துப்பூர்வமாக எந்த விளகத்தையும் கேட்கவில்லை என்றால் சரிதான். மேற்படி தங்கம் எந்த

புகாரும் கொடுக்கவில்லை என்றாலும் சரிதான். அய்யாபட்டி கிராம நிர்வாக அலுவலரை அழைத்து நான் இந்த சம்பவம் தொடர்பாக எழுத்துபூர்வமாக எந்த விளக்கத்தையும் பெறவில்லை என்றால் சரிதான். இந்த எதரீயானவர் போலி நடைசீட்டோ, போலி ரப்பர்ஸ்டாம்போ, டிராக்டரிலோ, லாரியிலோ ஜல்லி மற்றும் கற்கள் ஆகியவற்றை ஏற்றி திருட்டுத்தனமாக எடுத்து செல்லவில்லை என்றால் சரியல்ல. அதுபோன்ற சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. அப்படி சம்பவம் நடந்திருந்தால் போலீசார் மேற்படி சொத்துக்களை கைப்பற்றி நீதிமன்றத்திடமோ,ஆர்.டி.ஒ. விடமோ ஒப்படைத்திருப்பார்கள் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றாலும், காவல்துறை அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் பின்னனி என்னவென்று எனக்கு தெரியும் வேண்டுமென்றே பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.